# யோகாப்பியாசம் செய்பவர்கட்கு சிறைக் காலம் குறைப்பு



இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்திலுள்ள சிறைகளில் உள்ளவர்கள் யோகாசனப்பயிற்சிக்குச் சென்றால் அவர்களின் சிறைக்காலத்தில் குறைப்பு ஏற்படுத்தப்படும் என்று அம்மாநில சிறைச்சாலை பிரதம அதிகாரி சஞ்சேய் மேன் தெரிவித்துள்ளார். கைதிகள் சிறைச்சாலையில் நடைபெறும் யோகாசனப் பயிற்சிக்கு ஒழுங்காகச் சென்றால், அவர்களது ஒவ்வொரு மூன்று மாத சிறைவாசமும் பதினைந்து நாட்களால் குறைக்கப்படும்.

யோகாசனப்பயிற்சி செய்வதன்மூலம் சுய கட்டுப்பாட்டு மனநிலையைப் பெறுவதோடு வலுச்சண்டைக்குச் செல்லுதலும் குறையும் என்பதால் குறித்த காலத்திற்கு முன்னர் அவர்களை விடுவித்தலின் மூலம் கூடிய விரைவிலேயே சமூகத்துடன் இணைந்து வாழும் நிலையை உருவாக்க முடியுமென்று அதிகாரபீடம் நம்புகின்றது.

உடல்வலு, அமைதியான அணுகுமுறை, மன அழுத்தக்குறைப்பு, கோபத்தை கட்டுப்படுத்துவதற்கும் இப்பயிற்சி பெரிதும் உதவுகின்றது. ஒழுங்காகப் பயிற்சிக்குச் செல்பவர்கள் ஏனைய விடயங்களில் திருப்தி காரணமான நடவடிக்கையுடையவர்களாக இருக்கும் பட்சத்திலேயே காலக் குறைப்பிற்கான விண்ணப்பத்தினை மேற்கொள்ளலாம். கல்வி அறிவைப் பெறுவது, பட்டப்படிப்பை மேற்கொள்வது போன்ற செயலில் உள்ளவர்களிற்கே விண்ணப்பக் குறைப்புக் கோர உரிமையுண்டு. இம்மாநிலத்தில் உள்ள கைதிகளில் 4000 இற்கும் மேற்பட்டோர் இத்திட்டத்தால் நன்மையடையவுள்ளனர். கட்டுப்பாடு, நம்பிக்கை, சிறைச்சாலை உத்தியோகத்தர்களுடன் இணைந்து செயற்படுதல் என்பனவற்றை கைதிகள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காக அமெரிக்கா, இந்தியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் விபசனா என்னும் தியான முறை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இந்தியாவில் 1300 சிறைச்சாலைகள் உள்ளன. இவற்றில் இரட்டிப்பு எண்ணிக்கையில் கைதிகள் உள்ளனர். அதிகரித்துவரும் சிறைச்சாலைச் செலவினைக்குறைப்பதற்கு இதுவும் ஒரு வழியோ?

பலதும் பத்தும்

- விநோதன் -

# சமுகத்தின் மீதான சிறுவனின் ஆர்வம்



ஐநூறு பவுண்ட்ஸ்களையே சேர்ப்பதற்கு எண்ணிய சிறுவன் முடிவில் 72,000 பவுண்ட்ஸ்களை சேர்த்து அனைவரதும் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொண்டார். மேற்கு இலண்டனின், புஸ்ஹம் இல் வசிக்கும் 7 வயது சார்லி சிம்சன் அனுசரணையாளர்களின் உதவியுடன் தனது வீட்டிற்கு அருகிலுள்ள பூங்காவினைச் சுற்றி எட்டு கிலோமீற்றர் தூரம் வலம் வருவதன் மூலம் கெயிட்டியிற் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டவர்கட்கு உதவும் முகமாக 500 பவுண்ட்ஸ்களை சேகரிக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால் மக்களின் ஏகோபித்த ஆதரவால் அவ் இலக்கு 72,000 இற்கு உயர்ந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் ஹெயிட்டிய மக்களிற்கு உதவுமாறுவிடுத்த அழைப்பிற்கு இச்சிறுவனின் நடவடிக்கை தகுந்த பலனை அளித்துள்ளது. சிறுவனின் இவ் உயரிய மனிதநேயத்திற்கு ஐக்கியநாடுகள்சபை சிறுவர் நிதியம், ஹெயிட்டிய சிறுவர்கள் சார்பில் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துள்ளது.

# முன்கூட்டியே செல்லுங்கள் பிள்ளைகளைப் பெறுங்கள்



தென்கொரியாவின் சுகாதார அமைச்சு தனது பணியாளர்களை மாதத்தில் ஒரு முறை மாலை 7.30 மணிக்கே வீட்டிற்குச் சென்று மேலும் பிள்ளைகளைப் பெறும் திட்டத்திற்கு ஊக்கம் அளித்துள்ளது. ஒவ்வொரு மாதத்திலும் மூன்றாவது புதன் கிழமை பணியாளர்களை முன்கூட்டியே வீட்டிற்குச் செல்வதற்கு அனுமதி வழங்கியதன் மூலம் நாட்டின் நலனிற்காக தமது அமைச்சின் வேலை நேரத்தை அர்ப்பணம் செய்துள்ளதாக சுகாதார அமைச்சர் ஜிகூன் ஜா–ஹி தெரிவித்துள்ளார். ஆனால் அவசர கடமையில் உள்ள பணியாளர்கட்கு இது பொருந்தாது. முன்கூட்டியே வீடுசெல்ல அனுமதிப்பதென்பது மேலும் பிள்ளைகளைப் பெறுவதற்கான தொடர்பினை நேரடியாகக் கொண்டதல்ல எனினும், இருவரிற்குமிடையிலான தொடர்பிற்கான வாய்ப்பினையும் நிராகரிப்பதற்கில்லை. தென்கொரியாவில் வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அளவிற்கு பிறப்பு விகிதம் இல்லை. இது இன்று அந்நாடு எதிர்நோக்கும் மிகப்பெரிய விடயமாகும். இந்நாட்டு பெண்களின் வாழ்நாள் பிள்ளைபெறும் எண்ணிக்கையானது 2008ம் ஆண்டு 1.19 ஆகக் காணப்பட்டது. இதுவும் உலகின் மிகக் குறைந்த பிறப்பு எண்ணிக்கையாகும். இந்நிலை நீடித்தால் வரும் பத்துவருடங்களில் தென்கொரியாவின் சனத்தொகைக்கு சுருங்குநிலை ஏற்படும். மனிதவலுக்குறைவினால் தென்கொரியா, உலக பொருளாதாரப் போட்டியில் தோல்வி அடைய நேரிடலாம். ஏனைய அரச திருமணஞ்செய்த பணியாளர்களின் பிள்ளைப் பிறப்பு 1.82 ஆக இருக்கின்ற அதே நேரத்தில் சுகாதார அமைச்சு பணியாளர்களின் பிள்ளை பிறப்பு 1.63 ஆகவே உள்ளது. அதனால் தமது பணியாளர்களின் பிள்ளை பிறப்பு விகிதம் இரண்டு ஆண்டுகளில் 2.0 ஆக மாற்றங் காணவேண்டும் என்பதே தமது இலக்கு என்று இத்திட்டத்தை முன்னெடுக்கும் சுகாதார அதிகாரி கூறியுள்ளார். அயல் நாடான ஜப்பானைவிட தமது நாட்டின் பிறப்பு விகிதம் குறைவு என்பது தென்கொரியாவிற்கு வருத்தத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# ஒரு பாலாடைக் கட்டியால் பணி இழப்பு

நெதர்லாந்திலுள்ள மக்டொனால்ட்ஸ் இல் பணிசெய்து வந்த பெண் ஒருவரை தனது சகபணியாளர் ஒருவருக்கு ஹம்வேர்கருடன் ஒருதுண்டு பாலாடைக்கட்டி கொடுத்ததற்காக பணி இழப்பிற்கு உள்ளாக்கப்பட்டார். கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற இச்சம்பவத்திற்கு நீதி கேட்டு அப்பெண் வழக்குத் தொடர்ந்தார். அதனை விசாரணை செய்த லூவார்டன் மாவட்ட நீதி மன்றம் இப்பணிநீக்கமானது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்பதுடன், அப்பெண்ணின் எஞ்சிய ஐந்து மாத ஒப்பந்தத்திற்கு உரிய ஊதியமாக 4265 யூரோக்களை செலுத்த வேண்டும் என்பதுடன் நீதிமன்ற செலவினையும் மக்டொனால்ட்ஸ் நிறுவனமே ஏற்கவேண்டும் என்று சென்றவாரம் தீர்ப்பு வழங்கியுள்ளது.



ஹம்வேர்கருடன் பாலாடைக்கட்டியும் சேர்த்துக் கொடுத்ததென்பது பாலாடைக்கட்டிபேர்கர் கொடுத்ததையே ஒத்தது என்பதுடன், குடும்பத்தினர், நண்பர்கள், சகபாடிகள் எவருக்குமே இலவச அன்பளிப்பாக நிறுவனத்திற்குரியவற்றைக் கொடுப்பது நிறுவனத்தின் கட்டுப்பாட்டை மீறிய செயல் என மக்டொனால்ட் நிறுவனம் தனது வாதத்தை முன்வைத்தது. ஒரு பாலாடைக் கட்டிக்காக பணி நீக்கம் என்பது மிகவும் கடுமையான நடவடிக்கை என்று தனது விசனத்தை அழுத்தமாகவே நீதிபதி முன்வைத்தார்.

## காவல்துறைக்கு அதிர்ச்சி அளித்த சிறுவன்

மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லவேண்டிய வீதியில் 110 கிலோ மீற்றர் வேகத்தில் மகிழூர்தியை ஓட்டிச் சென்றவர் யார் என அறிந்த சைப்பிரஸ் நாட்டு காவல்துறையினர் அதிர்ச்சி அடைந்தனர். காவல்துறையினர் நிறுத்துமாறு கோரியும் அதனை அசட்டை செய்து விட்டுச் சென்றவர் யார் என கண்டுபிடிப்பதற்கு, 48 மணிநேரம் தேவைப்பட்டது. லார்னாவில் உள்ள மத்திய பிரதான வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒருமணியளவில் இரட்டிப்பு வேகத்தில் மகிழூர்தியை ஓட்டிச்சென்ற 12 வயதுச் சிறுவன் பெண் அதிகாரி ஒருவரையும் மோதிவிட்டே சென்றார். தனது தாயாரின் மகிழூர்தியினையே இப் பாடசாலைச் சிறுவன் ஓட்டிச்சென்றுள்ளார். மகன் அனுமதி பெறாமல் அடிக்கடி தனது மகிழூர்தியினை எடுத்துச் செல்வதாக தாயார் காவல்துறையிடம் கூறியுள்ளார். பாதுகாப்பாக வாகனத்தை வைத்திருக்க தவறிய குற்றத்திற்கு 50 வயது தாயார் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. சைப்பிரஸ் நாட்டு சட்டப்படி, பெற்றோருக்குத் தெரியாமல் அவர்களது குழந்தைகள் வாகனத்தை எடுத்துச்சென்றால் பெற்றோரே அதற்கு முழுப்பொறுப்பாளராவார்.